**20.02.2026**

**O.S.No.111/2001 மற்றும் 48/2005**

**பி.வா.சா.1 : கோவிந்தன்**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:-**

10) இந்த வழக்கு சொத்து வீடு குறித்து அசல் வழக்கு எண்.107/2002 என்ற வழக்கை சின்னபிள்ளை என்பவர் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கை எனது அம்மாவே திரும்ப வாபஸ் பெற்றுக்கொண்டார் என்றால் ஞாபகம் இல்லை. என் அம்மா அந்த வழக்கை திரும்ப வாபஸ் பெற்றுக்கொண்டார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது அம்மா இறந்தபிறது ரங்கநாதன் 48/2005 (பழைய அசல் வழக்கு எண்.716/2004) என்ற வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். 08.11.2004 ல் தாக்கல் செய்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கு தர்மலிங்கம் சுப்ரமணி கோவிந்தன் சிவாநந்தம் வேலாயுதம் சாந்தி பழனியம்மாள் ராஜாத்தி ஆகியோர் மேல் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு தாக்கல் செய்த தேதியிலேயே Status quo order வாங்கி உள்ளார் என்று சொன்னால் சரிதான். என் அம்மா காலமாகியபோது நாங்கள் வீட்டில் தான் இருந்தோம். நான் சொல்வது போல இந்த தாவா வீட்டில் நீங்கள் யாரும் இல்லை என்றும் ரங்கநாதன் மட்டும் தான் குடியிருந்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல.

11) மேற்படி வழக்கு போட்ட வீட்டில் வழக்கு போடுவதற்கு முன்பில் இருந்தே ரங்கநாதன் இருந்து வருகிறார் என்றால் காவல் துறையில் மனு கொடுத்து அங்கு இருந்து எங்களை வெளியேற்றி விட்டு அவர் இருந்து வருகிறார். அந்த வீட்டிற்கு வரி மற்றும் மின் கட்டணம் செலுத்தி வருகிறார் என்றால் என் தாயாரை ஏமாற்றி எழுதி வாங்கி கொண்டு வீட்டிற்கு வரி மற்றும் மின் கட்டணம் செலுத்தி வருகிறார். மேற்படி வீட்டிற்கு வீட்டு வரி மற்றும் மின் கட்டணம் அவர் பெயரில் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். இது சம்மந்தமாக ஆட்சேபணை தெரிவித்துள்ளேன். நான் ஆட்சேபணை தெரிவித்தற்கு இது சம்மந்தமாக நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல்

செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி ஆவணங்கள் காட்டப்பட்டது. வீட்டிற்கு வாங்கிய கடனுக்கு நான் எந்த தவணையாவது நான் கட்டி உள்ளதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் எதுவும் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணம் லோன் வாங்கியதற்கான கடன் ரசீது என்றால் என் அம்மா தான் கட்டி வந்தார். ரங்கநாதன் என் அம்மா கட்டிய ரசீதுகளை எடுத்து சென்றுவிட்டார். மேற்படி ரசீதுகள் அனைத்திலும் கட்டியவர் பெயர் ரங்கநாதன் உள்ளது ஆனால் ரங்கநாதன் பெயரில் கடனை செலுத்தியதாக இல்லை. சின்னப்பிள்ளை பெயரில் வாங்கிய கடனை ரங்கநாதன் தான் திருப்பி செலுத்தி தீர்த்துள்ளார் என்றால் சொத்து பிரிக்காமல் இருக்கும்போது செலுத்தி உள்ளார். நான் சொல்வது தவறு என்றும் என் அம்மா தான பத்திரத்தை ரங்கநாதன் பெயரில் எழுதி வைத்தததால் தான் அவர் உரிமையாக மேற்படி லோனை கட்டியுள்ளார் என்றால் சரியல்ல.

12) இது தாள் வரை குடும்ப சொத்துக்கள், விவசாய நிலங்கள் மற்றும் வீட்டிற்கு பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஊரில் பாகம் ஏதும் பிரிப்பதற்கு பஞ்சாயத்து எதுவும் பேசவில்லை. நரசிங்கபுரம் எல்லையில் உள்ள வீடு ரங்கநாதனுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் தான் இது நாள் வரை நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அது என் தாயார் சொத்து என்பதால் தான் நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. ரங்கநாதனுக்கு எழுதி வைத்த தான பத்திரம் எழுதி வைத்த பின் அதை ரத்து செய்வதற்கு என் தாயாருக்கு உரிமை இல்லாத நிலையில் மீண்டும் அந்த சொத்தை பொறுத்து எழுதி வைக்க என் தாயாருக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் தொடர்ந்து ரங்கநாதன் தாவா சொத்தை அனுமதித்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள வீட்டின் அசல் கிரய பத்திரத்தை வாதி தான் ஒப்படைத்துள்ளார் என்றால் என் அம்மா இறந்தபின்னிட்டு ரங்கநாதன் அனைத்தையும் எடுத்து சென்று விட்டார்.

13) என்னிடம் காட்டப்படும் பத்திரம் தான் என் தாயார் கிரயம் வாங்கிய பத்திரம் என்றால் சரிதான். அது வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ரங்கநாதன் தடை உத்தரவு வாங்கிய பின்னிட்டு அவரை அடித்ததால் தான் எங்கள் மீது 107 கு.வி.மு.ச படியான விசாரணை நடைபெற்று கோட்டாட்சியர் முன்பு விசாரணை நடைபெற்றது என்றால் இன்ஸ்பெக்டர் விசாரித்தார். அதன் பின்னிட்டு தான் இடைஞல் செய்வதை நிறுத்தி விட்டு வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. நானும் சுப்ரமணியும் தென்னங்குடிபாளையம் மற்றும் அப்பம்மசமுத்திரத்தில் உள்ள காட்டில் தான் குடியிருந்து வருகிறோம். தர்மலிங்கம் குடும்பம் அய்யனார்பாளையத்தில் குடியிருந்து வருகிறார். ரங்கநாதன் மேற்படி தென்னங்குடிபாளையம் மற்றும் அப்பம்மசமுத்திரத்தில் உள்ள விவசாய நிலங்களை பாகம் பிரித்து இறுதி நிலை தீர்ப்பாணை கோரி மனு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். தென்னங்குடிபாளையம் மற்றும் அப்பம்மசமுத்திரத்தில் உள்ள நிலம் பூராவும் அண்ணன் தம்பிக்கு பாத்தியப்பட்டது என்று தீர்ப்பாகி உள்ள நிலையில் சிவாநந்தம் உயில் மூலம் பாத்தியப்பட்டது என்று இரண்டு கிராமங்களில் உள்ள சொத்து முழுவதையும் அனுபவம் செய்து வருகிறாரா என்றால் இல்லை. ரங்கநாதனுக்கு சின்னபிள்ளை அம்மாள் தான பத்திரம் எழுதி வைக்க முழு உரிமை உள்ளது என்றும் அவர் விருப்படி தன்னிச்சையாக சுய நினைவுடன் தான் தான பத்திரம் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. அதன் பின்னிடடு 4 ஆண்டுகள் கழித்து பிழை திருத்தம் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த தான பத்திரத்தை ரத்து செய்யும் உரிமை சின்னப்பிள்ளைக்கே இல்லை என்று அவரே எழுதி வைத்துள்ள நிலையில் அந்த தான பத்திரத்தை ரத்து செய்தது செல்லாது என்று சொன்னால் சரியல்ல. எனவே இந்த தாவா சொத்து ரங்கநாதனுக்கு மட்டும் உரிமை உள்ளது என்று விளம்புகை செய்ய உரிமை உள்ளது என்றும் அதன்படி தீர்ப்பாக வேண்டும் என்றும் அதை ஆட்சேபணை செய்ய எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

14) மேற்படி தாவா சொத்தை சின்னபிள்ளை ரங்கநாதனுக்கு எழுதி வைத்து பின்னிட்டு அதை ரத்து செய்துவிட்டு சிவாநந்ததுக்கும் எழுதி வைத்துள்ளார் எனவே இரு பத்திரங்களும் ரத்து செய்யப்பட்டு விட்டதால் இரண்டு பேர்களின் பத்திரங்களும் அமுலுக்கு வரவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு எப்படி விவசாய நிலங்களை சமமாக பிரித்தார்களோ மேற்படி வீட்டிலும் நான்கு பேருக்கும் சமபங்கு உண்டு என்றால் சரிதான்.

**மறு குறுக்கு விசாரணை**

15) என் அம்மா ரங்கநாதனுக்கு எழுதி வைத்த தான பத்திரம் ஒரு தலைபட்சமாக அவரே ரத்து செய்துள்ளதால் அந்த பத்திரம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. அதேபோல சிவாநந்தம் பத்திரத்தை சிவாநந்தமும் சின்னபிள்ளையும் சேர்ந்து தான் ரத்து செய்தார்கள் என்றால் சரிதான். அதனால் தான் அந்த பத்திரம் நடைமுறையில் இல்லை என்றால் சரியல்ல. அதனால் தான் ரங்கநாதன் பத்திரம் மட்டும் தான் நடைமுறையில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.02.20 17:31:13 +0530

**Subordinate Judge, Attur.**